# அருள்மிகு மகாலட்சுமி திருக்கோயில்

## (அருள்மிகு அஷ்டலட்சுமி திருக்கோயில்)

## பெசன்ட் நகர், சென்னை– 90

போன் : 2446 6777, 2491 7777

**2019 ஆங்கிலப் புத்தாண்டு**

**செய்திக் குறிப்பு நாள் 28–12–2018**

இத்திருக்கோயிலில் 2019 ஆம் வருட ஆங்கிலப் புத்தாண்டை முன்னிட்டு அதிகாலை 4.00 மணி முதல் சன்னதிகள் பக்தர்கள் வசதிக்காக தரிசனத்திற்காக திறக்கப்படும்.

பக்தர்களின் வசதிக்காக நுழைவு வாயிலுக்கு முன்புறம் இருந்தே 'கியூ' வரிசைகள் அமைக்கப்பட்டு. நிழல் வசதியும், இளைப்பாறி கியூ வரிசையில் செல்ல அமரும் வசதியும் செய்யப்பட்டுள்ளது.

கட்டணமில்லா சேவையும், கட்டணச் சேவையும் எவ்வித பாகுபாடும் இல்லாமல் தரிசனம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அருள்மிகு ஆதிலட்சுமி, தான்ய லட்சுமி, தைரிய லட்சுமி ஆகிய மூன்று சன்னதிகளிலும் அர்ச்சனை செய்துகொள்ள சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. மற்ற சன்னதிகளில் தரிசனம் மட்டுமே செய்ய இயலும்.

ஆதிலட்சுமி முதல் அனைத்து லட்சுமி சந்நிதிகளிலும் அந்தந்தச் சந்நிதிகளுக்குரிய சிறப்போடு அலங்காரங்களும் செய்யப்பட உள்ளன. அஷ்டலட்சுமிகளையும் தரிசனம் செய்தபிறகே மற்ற சன்னதிகளை தரிசிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பெருமாள், மகாலட்சுமி, அஷ்டலட்சுமிகள் சன்னதி ஆகிய அனைத்து மூர்த்தங்களுக்கும் சிறப்பு அலங்கார ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இலவசப் பிரசாதம் வழங்கவும், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் குடிப்பதற்காகவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பக்தர்கள் நலன் கருதி தகரஷீட் பந்தல், கியூ வரிசையில் அமர்ந்து செல்லுதல், தீயணைப்பு வண்டி ஏற்பாடுகள், பாதுகாப்பு ஏற்பாடுகள் ஆகியவை செய்யப்பட்டுள்ளன.

**நபர் ஒன்றுக்கு ரூ.100/–க்கான விரைவு நுழைவுச் சீட்டு வாங்கும் சேவார்த்திகளுக்கு திருக்கோயில் நினைவுப் பரிசாக நாட்குறிப்பு (டைரி) ஒன்று இலவசமாக வழங்கப்படவுள்ளது மற்றும் திருக்கோயில் படம் மற்றும் பிரசாதங்கள் இலவசமாக வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.**

**சேவார்த்திகள் / பக்தர்கள், பொது மக்களுக்கு தாம்பரம் இந்து மிஷின் மருத்துவமனையின் மூலம் இலவச மருத்துவ முகாம் நடைபெற உள்ளது.**

பெருந்திரளான மக்கள் வரவை எதிர்பார்த்து வழக்கமான பூஜை நேரங்கள், சுத்தம் செய்யும் நேரங்கள் தவிர அதிகாலை 4.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை பக்தர்களின் வழிபாட்டிற்காக அனைத்துச் சன்னதிகளிலும் இடையூறு இல்லாமல் (முழு நேரமும்) தரிசனம் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. காவல் துறையினரும் போதிய பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பக்தர்கள், "தாம் பெற்ற இன்பம் இவ்வையகம் பெறுக" என்பதற்கேற்ப, மற்றவர்கள் தரிசனம் செய்வதற்கு இடையூறு செய்யாவண்ணம் தரிசனம் செய்ய ஒத்துழைக்குமாறும், திருக்கோயில் நிர்வாகத்திற்குப் பூரண ஒத்துழைப்பு நல்கிடுமாறும் கனிவுடன் வேண்டுகிறோம்.

துு. சந்திரசேகரன், எம்.ஏ.,
செயல் அலுவலர்

மு. ஜோதி லட்சுமி, எம்.ஏ., பி.எல்.,
தக்கார் / உதவி ஆணையர்